**O.S.No.17/2019**

வா.சா.1, திரு.குமரவேலு
நாள் : 01.09.2025 நேரம் : 11.15 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)தாவா சொத்து சர்வே எண். 312ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 38 சென்ட் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 312ல் எத்தனை சென்ட் நான் கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் 80 சென்ட் கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி 80 சென்ட் எந்த திசையில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சர்வே எண். 312ல் வடக்கு பக்கத்தில் உள்ள 80 சென்ட் கிரையம் பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த பிராதில் சொத்து விபரத்தில் எந்த திசையில் மேற்படி 80 சென்ட்டை கிரையம் பெற்றுள்ளேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சொத்து விபரத்தில் நான் குறிப்பிட்டுள்ள கிராம பட்டா எண்.6627 சண்முகம் மனைவி சுப்பம்மாள் மற்றும் அழகர் மனைவி லட்சுமி ஆகியவர்களின் பெயரில் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் சரிதான்.

2)மேற்படி சண்முகம் மனைவி சுப்பம்மாளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குருசாமி மனைவி பெயர் சுப்பம்மாள் என்றால் சரிதான். மேற்படி குருசாமி மற்றும் சுப்பம்மாளுக்கு திருநாவுக்கரசு மற்றும் பாலு வாரிசுகள் என்றால் சரிதான். நான் மேற்படி பாலுவிடமிருந்து தான் 80 சென்ட் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெறும்போது தாவா சொத்தின் 6627 பட்டா என்பது சண்முகம் மனைவி சுப்பம்மாள் பெயரில் தான் இருந்தது. குருசாமி மனைவி சுப்பம்மாள் பெயரில் இல்லை என்றால் சரிதான். மேற்படி இரு சுப்பம்மாளும் தனித்தனி நபர்கள் என்றால் சரிதான்.

3)சர்வே எண்.312ல் மொத்த விஸ்தீரணமும் 2 ஏக்கர் 38 சென்ட் இன்றைய தேதி வரை அ பதிவேட்டில் ச.சுப்பம்மாள் பெயரில் உள்ளது என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.312ல் மொத்த விஸ்தீரணமும் 2 ஏக்கர் 38 சென்ட் இன்றைய தேதி வரை அ பதிவேட்டில் ச.சுப்பம்மாள் பெயரில் உள்ளது என்பது தெரிந்தும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 312ல் உள்ள மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 38 சென்டின் தென்புறம் 1ம் பிரதிவாதி கடந்த 1.7.2002ம் தேதி ராமுசேர்வை மகன் கன்னிச்சாமியிடமும் அதேபோல் 2 ஏக்கர் 38 சென்டின் வடபுறம் 2ம் பிரதிவாதி கடந்த 1.7.2002ம் தேதி ராமுசேர்வை மகன் முத்துச்சாமியிடமும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணங்களை எனது தரப்பு வா.சா.ஆ.9,10 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4)மேற்படி 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கண்ணுச்சாமிக்கு சுப்பம்மாள் என்பவர் கடந்த 31.08.1977ம் தேதி கிரையம் கொடுத்ததற்கான கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.6 ஆவணமாக எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற முத்துச்சாமிக்கு சுப்பம்மாள் என்பவர் கடந்த 20.08.1977ம் தேதி கிரையம் கொடுத்ததற்கான கிரைய ஆவணத்தை வா.சா.ஆ.7 ஆவணமாக எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்ற சர்வே எண்.312/2 சொத்திற்கு அவரது பெயரில் பட்டா எண். 7092 என இன்றைய தேதி வரை தாக்கலாகி வருகிறது என்றால் தெரியாது.

5)அதேபோல் சர்வே எண். 312ல் சர்வே எண். 312/1 என 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண். 7091 என இன்றைய தேதி வரை தாக்கலாகி வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சர்வே எண். 312ல் உள்ள தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தையும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்று இன்று முதல் உழவடை செய்து அவர்கள் பெயரில் பயிர்காப்பீடு பெற்று வருகிறார்கள் என்றால் நான் தான் உழுது வந்தேன், 1 வருட காலமாகத்தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் உழவடை செய்கிறார்கள்.

6) நான் தாவா சொத்தை 21.10.2008 ல் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற காலத்திலிருந்து எனது அனுபவத்தை நிரூபிப்பதற்கு நீதிமன்றத்தில் எந்த வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது புஞ்சைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை 2008 ல் கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றாலும், எனக்கு முன்னரே 1,2 பிரதிவாதிகள் 2002 ம் ஆண்டில் கிரையம் பெற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல, நான் தான் முதலில் தாவா சொத்தை கிரையம் பெற்றேன்.

7)1,2 பிரதிவாதிகள் 2002 ம் ஆண்டிலியே தாவா சொத்தை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கிய பத்திரத்தை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்லுவது போல மேற்படி 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கிய பத்திரத்தை ரத்து செய்ய கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், விளம்புகை பரிகாரம் மட்டும் தான் கோரியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு முன்னரே 1,2 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற விபரம் தெரிந்ததால் தான் மேற்படி பத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் மட்டும் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

8)நான் வழக்கு தாக்கல் செய்யும் போது 3 ம் பிரதிவாதி லட்சுமியை சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றாலும், பின்னர் அவரை நீக்கிவிட்டேன் என்றாலும் சரிதான். 1,2 பிரதிவாதிகள் என்மீதும், இந்த வழக்கில் நீக்கம் செய்யப்பட்ட 3 ம் பிரதிவாதி லட்சுமி மீதும் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 5/2021 வழக்கில் நான் வாங்கிய கிரைய பத்திரம் மற்றும் மேற்படி லட்சுமி வாங்கிய கிரைய பத்திரம் செல்லாது என ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்தும், மேற்படி வழக்கை நான் ஆஜராகி நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

9)அதேபோல் லட்சுமி என்பவரும் உபயவாதிகளை சேர்த்து இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 4/2024 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது பட்டா எண். 6627 ஐ தகுந்த விசாரணைக்கு பிறகு RDO ரத்து செய்து, 1,2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாற்ற உத்தரவு ஏற்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கும், எனது பங்காளிகள் அருணாச்சலம்பிள்ளை மற்றும் பூவன்பிள்ளை ஆகியோர்களுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

10)வா.சா.ஆ.8 ஆவணமான 2ம் பிரதிவாதிக்கு முத்துச்சாமி எழுதி கொடுத்த மேற்படி ஆவணத்தில் சுப்பம்மாள் என்பவர் எனக்கு 1977ம் தேதி எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் என்ற வாசகம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணமான 1ம் பிரதிவாதிக்கு கண்ணுச்சாமி எழுதி கொடுத்த மேற்படி ஆவணத்தில் சுப்பம்மாள் என்பவர் எனக்கு 1977ம் தேதி எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் என்ற வாசகம் உள்ளது என்றால் சரியல்ல.

11)நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் சுப்பம்மாள் என்பவர் முத்துச்சாமிக்கும், கண்ணுச்சாமிக்கும் 1956ல் அவர்களுக்கு கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு வாசகங்கள் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணமான பட்டா எண். 6627ல் சண்முகம் மனைவி சுப்பம்மாள் என்பவரும், நான் கிரையம் பெற்றதாக கூறும் சுப்பம்மாள் மகன் பாலு என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணமானது 15.03.2017ம் தேதி பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றாலும், வருவாய் ஆவணங்களில் தற்போது நடைமுறையில் இல்லை என்றாலும் சரியல்ல.

12)பரமக்குடி RDO முறையான விசாரணைக்கு பின்னர் வா.சா.ஆ.11 ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது 3ம் பிரதிவாதி லட்சுமியையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு, தற்போது அவருடன் சமாதானம் செய்து கொண்டு பிரதிவாதிகளை

அழைக்களிக்க இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றதாக கூறும் பாலுவின் தந்தையான குருசாமியுடன் உடன் பிறந்தவர்கள் 5 பேர் என்றால் சரிதான். 1.குருசாமி, 2.லட்சுமணன், 3.ராமசாமி, 4.முருகவேல், 5.சுப்பிரமணி என்றால் சரிதான். மேற்படி 1.குருசாமியின் மனைவி தான் சுப்பம்மாள் என்றால் சரிதான். மேற்படி 5 நபர்களின் தகப்பனார் பெயர் பூவன்பிள்ளை என்றால் சரிதான். மேற்படி பூவன்பிள்ளையின் உடன் பிறந்தவர்கள் 1.சண்முகம், 2.அருணாச்சலம் என்றால் சரிதான். மேற்படி 1.சண்முகம் என்பவருக்கு 1.சுப்பம்மாள், 2.சுப்பையா, 3.ராமுசேர்வை என்றால் சரிதான். மேற்படி 1.சுப்பம்மாளுக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான்.

13) மேற்படி 1.சுப்பம்மாள் திருமணம் செய்து கொண்டு சரியாக வாழாமல் வாழாவெட்டியாக வந்துவிட்டதால் அவர் தகப்பனார் அவருக்கு சொத்து எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1 ஏக்கர் நிலம் தான் எழுதி கொடுத்தார். மேற்படி 2.சுப்பையா மகன் தான் கண்ணுச்சாமி, அதேபோல் 3.ராமுசேர்வை மகன் தான் முத்துச்சாமி என்றால் சரிதான். மேற்படி 1.சுப்பம்மாள் என்பவர் சர்வே எண். 312 ல் உள்ள மொத்த சொத்தையும் கண்ணுச்சாமி மற்றும் முத்துச்சாமிக்கு தலா 1 ஏக்கர் 18 சென்ட் வீதம் தென்புறமும், வடபுறமும் 31.08.1977 மற்றும் 20.08.1977 ல் பதிவு கிரையம் மூலம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. சுப்பம்மாளுக்கு 1 ஏக்கர் நிலம் தான் பாத்தியமாகும், அதனால் அவர் மொத்த சொத்தையும் எழுதி கொடுக்க முடியாது.

14)மேற்படி கிரைய பத்திரங்களின் அடிப்படையில் தான் தாவா சொத்து உட்பட சர்வே எண். 312 ல் கண்ட மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் 38 சென்ட்டையும் 1,2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.22PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.09.01 16:20:09 +0530